இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 20-09-2024

# மலர்க மாநில சுயாட்சி - 1

“மாநில சுயாட்சியை வென்றெடுக்க சட்ட முன்னெடுப்புகளை கழகம் மேற்கொள்ளும்” என்று திராவிட முன்னேற்றக் கழகப் பவள விழா - முப்பெரும் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரக்க முழக்கமிட்டுள்ளார்.

**“நமது எல்லாக் கனவுகளும் நிறைவேறிவிட்டதா எனக் கேட்டால்... இல்லை! மாநில உரிமைகளை வழங்கும் ஓர் ஒன்றிய அரசு அமையவில்லை. நிதி உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு இன்னமும் நாம் போராட வேண்டிய நிலை தான் இருக்கிறது. பேரறிஞர் அண்ணாவும் - தலைவர் கலைஞரும் வலியுறுத்திய மாநில சுயாட்சிக் கொள்கை என்பது நமது உயிர்நாடிக் கொள்கைகளில் ஒன்று. எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக, உறுதியாகச் செய்யும்” என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வழங்கிய செய்தி மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான செய்தி ஆகும்.**

“மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி” என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழக்கம். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு நடைபெற்ற திருச்சி மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை தலைவர் கலைஞர் வகுத்துக் கொடுத்தார். அதில் ஐந்தாவது முழக்கம்தான் இது.

பன்முகத்தன்மை கொண்ட இந்த பரந்துவிரிந்த இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாடு காலம் கடந்தும் நிலைபெற வேண்டுமானால் அதற்கு ஒரே மருந்து மாநில சுயாட்சிதான் என்பதை பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் காலம் தோறும் வலியுறுத்திக் கொண்டே வந்தார்கள்.

இந்தியா ஒரு நாடல்ல, அது பல்வேறு மொழிவழி தேசிய இனங்கள் கொண்ட ஒரு துணைக்கண்டமாகும். மொழிவழி தேசிய இனம் கொண்ட பல்வேறு பகுதிகளை, ஒன்றாக இணைத்து ஒரே இடத்தில் அதிகாரத்தைக் குவிக்கும் வகையில் ஆக்கி பிரிட்டிஷ் அரசு ஆண்டது. அதுதான் தங்களுக்கு வசதியானது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். அதற்காக உருவாக்கப்பட்டதுதான் - அதிகாரம் பொருந்திய மத்திய அரசு ஆகும்.

இன்றைக்கு நாம் வைத்திருக்கும் டெல்லி அதிகார மையமானது 1833 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிச் சட்டத்துக்குப் பிறந்த குழந்தைதான். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அரசின் சட்டத்தை அப்போது நீட்டித்தது பிரிட்டிஷ் நாடாளுமன்றம். அன்றைக்கு வங்காள மாகாண ஆளுநராக இருந்தவரை, இந்தியாவுக்கே கவர்னர் ஜெனரலாக ஆக்கினார்கள். அன்றைய பம்பாய், மெட்ராஸ் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களும் பறிக்கப்பட்டு கவர்னர் ஜெனரலுக்கே போனது. 1857 சிப்பாய் கலகம் எனப்படும் சுதந்திரப் போர் நடைபெற்ற காரணத்தால் அதனை அடக்குவதற்காகவும் அனைத்து அதிகாரங்களையும் கவர்னர் ஜெனரலுக்கே கொடுத்தார்கள்.

இந்தியா முழுமைக்கும் வரி விதிக்கும் அதிகாரத்தை கவர்னர் ஜெனரலே எடுத்துக் கொண்டார். நிதி அதிகாரத்தை மொத்தமாக மாகாணங்களில் இருந்து பறித்தார்கள். இதனை முதலில் எதிர்த்தவர், அன்று மெட்ராஸ் மாகாணத்தின் ஆளுநராக இருந்த சார்லஸ் ட்ரெவிலியன். ‘மையப்படுத்தப்படும் வரி விதிப்பு முறையானது மெட்ராஸ் மாகாணத்தின் வளர்ச்சிக்கு உதவாது’ என்று ‘மாநில சுயாட்சிக் குரலை’ ஓங்கி ஒலிப்பவராக பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆளுநர் இருந்தார். ஆனால் இன்று சுதந்திர இந்தியாவில் அடக்குமுறை ஆளுநர்களே இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலம் என்று ஏன் சொல்கிறோம் என்றால்.. 1860 ஆம் ஆண்டே மெட்ராஸ் மாகாணத் தொழில் கூட்டமைப்பினர் இந்த வரி விதிப்பு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். (பா.ஜ.க. ஆதரவாளராகவே இருந்தாலும் ஜி.எஸ்.டி.யை எதிர்த்து அன்னபூர்ணா அதிபர் கேள்வி கேட்டது இதன் தொடர்ச்சிதானே!)

இப்படி மெட்ராஸ் மாகாணத் தொழில் கூட்டமைப்பினர் கேள்வி கேட்க, அன்றைய ஆளுநர் சார்லஸ் ட்ரெவிலியன் தான் தூண்டுகிறார் என்று சொல்லி அவரையே ஆளுநர் பதவியில் இருந்து பிரிட்டிஷ் ஆட்சி தூக்கியது. இப்படி அராஜகமாக அறிமுகம் செய்யப்பட்டதுதான், மையப்படுத்தப்பட்ட நிதி அதிகாரம் ஆகும். அதுதான் சுதந்திர இந்தியாவிலும் தொடர்கிறது. மாநிலங்களின் வளத்தை மொத்தமாகச் சுரண்டி இந்திய ஒன்றிய அரசு வைத்துக் கொள்கிறது. இந்த இடத்தில்தான் ‘மாநில சுயாட்சிக் கொள்கை’ உதயமாகிறது.

**‘க்ரீம் பன்னுக்கு ஏன் இவ்வளவு வரி போடுகிறீர்கள் என்று கேட்கக் கூட உரிமை இல்லாத நிலை இன்று உருவாகி இருக்கிறது’ என்று முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்வி, கிண்டலான கேள்வி அல்ல, வேதனையான கேள்வியாகும். இதில்தான் ஒன்றிய அரசின் அனைத்து எதேச்சதிகாரத் தன்மைகளும் அடங்கி இருக்கிறது.**

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அதிகாரக் குவியல் கொண்ட அரசுக்கு எதிராக முதல் குரல் கொடுத்தது நீதிக்கட்சி. சமூகநீதி மட்டும்தான் நீதிக்கட்சி பேசியது என்று பலரும் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். இல்லை, கூட்டாட்சி முறையையும் அந்தக் காலத்திலேயே வலியுறுத்தியது நீதிக்கட்சி.

1918 அக்டோபர் 2 அன்று இங்கிலாந்து பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் பேசும்போதும், “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏற்று அதற்கேற்ப அரசியல் சீர்திருத்தம் செய்வது ஒன்றுதான் தற்போது சென்னை அரசியலில் நிலவி வரும் நோய்களை ஒழிக்க வழி’ என்றார் டி.எம்.நாயர். “1909இல் இஸ்லாமியர்க்கு வழங்கப்பட்டது போன்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பார்ப்பனரல்லாதாருக்கு வேண்டும்” என்றார் அவர். இதனுடன் இணைத்து கூட்டாட்சி முறையையும் வலியுறுத்தினார். Our immediate out look, Political reconstruction in india - ஆகிய தலைப்புகளில் 1917 ஆம் ஆண்டே பேசி இருக்கிறார் டி.எம்.நாயர்.

‘அனுப்பி வைக்கப்படும் ஆளுநர்களுக்கு எதுவும் தெரியாது’ என்றும் 100 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிய தொலைநோக்காளர்தான் டி.எம். நாயர்.

- தொடரும்



அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்களின் மூத்த சகோதரர் மறைந்த பி.கே.தேவராஜுலு அவர்களின் மகன் லோகேஷ்குமார் – ரித்திகா இணையரின் திருமண வரவேற்பு விழா சென்னை வேப்பேரியில் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தின் மூலம் இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ள லோகேஷ்குமார் – ரித்திகா இணையர், தந்தை பெரியாரும் – பகுத்தறிவும் போல; அண்ணாவும் – மாநில சுயாட்சியும் போல; கலைஞரும் – சமூகநீதியும் போல; தலைவரும் – வெற்றிகளும் போலப் பல்லாண்டு வாழ்கவென இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி மகிழ்ந்தார்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (18.09.2024) இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் (ம) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 (Khelo India Youth Games 2023), சென்னைப் பெருநகரப் பகுதியில் நடத்திய செலவான ரூபாய் 43.33 கோடி நிதியை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இன்று முதல் 3 நாட்களுக்கு
## சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்!

சென்னை, செப்.20-

வார விடுமுறையை முன்னிட்டு இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் தகவல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்; செப். 20, 21,22 வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் இராணிப்பேட்டை மாவட்டத்திலுள்ள
# 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத்தின் வெற்றிக்கு அயராது பாடுபடுவோம்!
### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரை!

இராணிப்பேட்டை, செப்.20-

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி மேற்கு ஒன்றியம், ரெட்டிவலம் கிராமத்தில் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர செயற்குழு கூட்டம் நடந்தது. பனப்பாக்கத்தில் டாடா கார் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்பது குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மாவட்ட கழக அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார்.

இதில் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர். வினோத்காந்தி , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.சுந்தரம், மு. கண்ணையன், அசோகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார், மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜெயந்தி திருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

தீர்மானம்:1 தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் டாடா கார் உற்பத்தி தொழிற்சாலை 470 ஏக்கர் பரப்பளவில் இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில் ரூ.9000 கோடி மதிப்பில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலை வருகிற 28.9.2024 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட உள்ளது.

நமது மாவட்டத்திற்கு வருகை தரும் இந்தியாவின் முதல்வர்களில் முதல் முதல்வராக அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி, பொற்கால ஆட்சியை வழி நடத்தி வரும், திராவிட மாடல் நாயகர், ஆருயிர் தலைவர் முதல்வர், தளபதி அவர்களுக்கு அன்று காலை மாவட்டக் கழகச் செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிப்பதென தீர்மானிக் கப்படுகிறது.

தீர்மானம்: 2

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் நமது மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், சோளிங்கர், இராணிப்பேட்டை, ஆற்காடு ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தி.மு.க. கழகத்திற்கு வெற்றிக்கு அயராது பாடுபட்டு, நமது கழகத் தலைவர் - முதல்வர் தளபதி அவர்களுக்கு பெருமை சேர்ப்பது என தீர்மானிக் கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றிய செயலாளர்கள் ஆர்.தமிழ்ச்செல்வன், கே.பசுபதி, ஆர்.சௌந்தர், எம்.பாலாஜி தெய்வசிகாமணி, பாண்டுரங்கன், ஏ.வி. நந்தகுமார், வி.பி.எஸ். கலைச்செல்வன், பி.வடிவேலு, ஆர்.பி.ரவீந்திரன், எஸ்.ஜி.சி பெருமாள், வி.எம்.சந்திரன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.என். பூர்ண சந்திரன், எம்.சண்முகம், சேஷாவெங்கட், எஸ். அசோக், கே.ரமேஷ், நகர கழக செயலாளர்கள் வி. எல்.ஜோதி, டி.தில்லை, பி.பூங்காவனம், ஏ.வி.சரவணன், எம்.கோபி, பேரூர் செயலாளர்கள் ஜனார்த்தனன், எஸ்.நாகராஜன், பி. கே.பாபு, என்.ஆர்.சீனிவாசன், பாஸ் என்ற நரசிம்மன், எஸ்.பெரியசாமி, எஸ். டி.சேதுரவி, கே.பி.ஜே. தாமோதரன், அரக்கோணம் நகர அவைத்தலைவர் துரை சீனிவாசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், சுற்றுச் சூழல் அணி மாவட்ட அமைப்பாளர்கள் வேதா சீனிவாசன், பி.எல்.டி.சிவா மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக ஒன்றிய பா.ஜ.க. அரசு அமைத்திருந்த குழுவின் பரிந்துரைகளுக்கு பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் கொடுத்துள்ளதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! ‘கிடக்கிறது எல்லாம் கிடக்கட்டும்; கிழவியைத் தூக்கி மனையில் உட்கார வை’ - என்ற பழமொழியைப் போல இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த செயல்.**

**தீர்க்க வேண்டிய எவ்வளவோ பிரச்சினைகள், நிறைவேற்ற வேண்டிய எத்தனையோ உறுதிமொழிகள் இருக்கும் போது, மக்களை வழக்கம் போல் திசை திருப்புவதற்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு கையில் எடுத்திருக்கும் உத்தியே இது !**

**ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது முழுக்க முழுக்க சாத்தியமே இல்லாதது.**